## திருப்பெரும்புதூர் தொகுதி –

# வரதராஜபுரம் பகுதியில் மழை வெள்ளம் - குறைகள் தீர்க்கப்படும்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் துரைமுருகன் உறுதி!

சென்னை, டிச.15-

சட்டப் பேரவையில் திருப்பெரும்புதூர் தொகுதி காங்கிரஸ் உறுப்பினர் கு. செல்வப்பெருந்தகை எழுப்பிய கேள்வியும் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த பதிலும் வருமாறு:-



**கு. செல்வப்பெருந்தகை:** கடந்த வாரம் பெய்த மழையால் வரதராஜபுரம் பகுதியில் முல்லை நகர், தனலட்சுமி நகர், PTC நகர், அஷ்டலட்சுமி நகர் போன்ற இடங்களில் பெருவெள்ளம் ஏற்பட்டதை பத்திரிக்கை, தொலைக்காட்சியில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். உங்களிடம் எடுத்து வந்து காண்பித்தேன். நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அனுபவம் வாய்ந்தவர், எதையெடுத்தாலும் முழுமையாக செய்யக் கூடியவர். அரைகுறையாக செய்யாதவர். அதை நாடு அறியும். ஆனால், அந்தப் பகுதியில் என்னுடைய தொகுதியான வரதராஜபுரம் பகுதியில் அரைகுறையாக வேலை நடந்திருக்கிறது. முழுமையாக வேலை நடைபெறவில்லை.

ஆனால், முன்பு ஒரு காலத்தில் எல்லாம் மழை, வெள்ளம் வந்தால் பத்து நாட்கள், இருபது நாட்கள் தண்ணீர் தேங்கி நிற்கும். உங்களுடைய முயற்சியால் இப்போது ஒரு நாளில் வடிந்து விடுகிறது. இருந்த போதிலும் நான் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளில் *Thiruppugazh Committee*யுடைய பரிந்துரை இருக்கிறது. *Thiruppugazh Committee*யினுடைய பரிந்துரையை முழுமையாக நிறைவேற்றினால்தான் அங்கே தண்ணீர் இல்லாத பகுதியாக அந்தப் பகுதியைப் பார்க்கமுடியும். கடந்த காலத்திலிருந்து நீங்கள் இதற்கு முன்பு இருக்கும் போது, ஒரு அறிக்கையை தாக்கல் செய்து இருக்கிறீர்கள். அதில் ஒரத்தூர் ஏரி, படப்பை ஏரி, மணிமங்கலம் ஏரியை நீர்தேக்கமாக மாற்றினால் அந்தப் பகுதியில் தண்ணீர் வராது.

ஆகவே, திருப்புகழ் கமிட்டியைஎங்களுடைய அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு நிறைவேற்றுவார் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். எல்லா இடத்திலும் இருப்பதுபோல நெருக்கடி எனக்கும் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. ஒரு உத்தரவாதம் கொடுத்திருக்கிறேன். வருகின்ற நிதி நிலை அறிக்கையில் எங்களுடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் திருப்புகழ் கமிட்டியை நிறைவேற்றவில்லையென்று சொன்னால், நான் சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்வது அது அவர் கையில்தான் இருக்கிறது என்று.

ஆகவே நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் நன்றாக என்னிடம் மாட்டிக்கொண்டார். அவர் அடுத்தமுறை சட்டமன்ற உறுப்பினராக வருவது என் கையில்தான் இருக்கிறது. திருப்புகழ் கமிட்டி மட்டுமல்ல. திருவாசகம் கமிட்டி கொடுத்தாலும் சரி. நீங்கள் கூறியது எனக்குத் தெரியும். அதற்காக முந்தைய நாள் கூட அதிகாரிகளை அழைத்து பேசியிருக்கிறேன். கவலைப்பட வேண்டாம். குறை தீர்க்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பதிலளித்தார்.

## பா.ஜ.க.வுடன் கள்ளக் கூட்டணி அம்பலம்!

# இரட்டை வேடம் போட்டு இஸ்லாமிய மக்களை ஏமாற்றுகிறது அ.தி.மு.க.!

## சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அறிக்கை!

சென்னை,டிச.15-

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



இஸ்லாமிய மக்களை அவதூறு செய்து பேசிய அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதியை பணி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானத்தை ஆதரித்து கையெழுத்திட மறுத்து, இஸ்லாமிய மக்களுக்கு மீண்டும் துரோகத்தை செய்துள்ளது அ.தி.மு.க. இதன் மூலம் பாஜகவுடன் கள்ளக்கூட்டணியை எடப்பாடி பழனிசாமி தொடர்வது அம்பலமாகி உள்ளது.

விஸ்வ ஹிந்து பரிஷத் நிகழ்ச்சியில் இஸ்லாமியர்களை அவதூறாக பேசிய அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி சேகர் குமாரை பணிநீக்கம் செய்யக்கோரும் தீர்மானத்தை எதிர்க்கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்துள்ளனர். “வெறுப்பு பேச்சு”, “வகுப்பு வேற்றுமையை தூண்டுதல்”, “அரசியலமைப்பை மீறுதல்” என்ற 3 குற்றச்சாட்டுகளை உள்ளடக்கிய அந்த தீர்மானத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் நமது திராவிட முன்னேற்ற கழகத்தின் மாநிலங்களவை உறுப்பினர்களான என்.ஆர்.இளங்கோ, கிரிராஜன், வில்சன், அப்துல்லா ஆகியோர் ஆதரவாக கையெழுத்திட்டுள்ளனர். ஆனால் அ.தி.மு.க.வை சேர்ந்த நான்கு மாநிலங்களவை உறுப்பினர் இருந்தும் ஒருவர் கூட இஸ்லாமிய மக்களுக்கு ஆதரவாக நின்று அந்த தீர்மானத்தை ஆதரித்து கையெழுத்திடவில்லை.

ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சிறுபான்மை மக்களின் உரிமைக்கும், பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படும் போதெல்லாம் அவர்களுடன் தோளோடு தோள்நின்று ஆதரவாக செயல்பட்டு வரும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம் தான். மதப்பிரிவினைவாதிகளுடன் என்றும் கைகோர்க்க மாட்டோம் என அன்றுமுதல் இன்றுவரை நெஞ்சுரத்தோடு களமாடி வருபவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஆனால்அடிமைஅதிமுகவோ ஒருபக்கம் பாஜக கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டோம் என கூறி மக்களை ஏமாற்றிக் கொண்டு மறுபக்கம் பாஜகவின் கள்ள உறவை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஏற்கனவே CAA வை ஆதரித்து வாக்களித்து சிறுபான்மை மக்களுக்கு எதிராக செயல்பட்ட அடிமை அதிமுக, தற்போதும் சிறுபான்மை மக்களுக்கு எதிராகவே செயல்பட்டு வருகிறது என்பது இப்போது உள்ளங்கை நெல்லிக்கனியாய் அம்பலமாகி உள்ளது.

“இஸ்லாமியர்கள் கனிவு, சகிப்புத்தன்மை இல்லாத ஆபத்தானவர்கள்” என்று பிளவு படுத்தும் நோக்கம் கொண்ட சொற்களைப் பயன்படுத்தி பேசியிருந்த அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சேகர் குமார்க்கு எதிராய் ஒரு கையெழுத்து போடக்கூட வக்கற்ற நிலையில் தான் அதிமுக உள்ளது. “இஸ்லாமியருக்கு பாதுகாவலாக இருப்பது அதிமுக மட்டுமே!?” என வாய்கிழிய பேசும் எடப்பாடி பழனிசாமியின் பொய் வேடம் கலைந்து போய் உண்மை முகம் வெளிப்பட்டு விட்டது. இஸ்லாமிய மக்களது முதுகில் குத்துவதையே வாடிக்கையாக கொண்ட அடிமை அதிமுகவையும் அதன் தற்போதைய தளகர்த்தா பழனிச்சாமியின் துரோகத்தையும் இஸ்லாமிய மக்கள் என்றுமே மன்னிக்க மாட்டார்கள்.

இவ்வாறு அமைச்சர் சா.மு. நாசர் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி.சிவக்குமார் இல்லத் திருமண விழா அண்மையில் நடைபெற்றது. கைத்தறி துணி நூல் மற்றும் கதர் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, மணமக்கள் பி.எஸ்.சிவா பி.எஸ்.வேண்டா ஆகியோரை அவர்களது இல்லத்திற்கு நேரில் சென்று வாழ்த்தினார். இதில் மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், சுகுமார், டி.ஆர்.கே.பாபு, உதயசூரியன், சஞ்சய் காந்தி, பி.ஜி.அண்ணாதுரை, பி.எஸ்.செல்வம், பி.எஸ்.மேகவண்ணம், சதீஷ்குமார், வெங்கடேசன், பரதேசி, கோபால், டெல்லி, வாசு, ஜீவா மற்றும் பலர் உள்ளனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டு தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நபர்களை நேரில் பார்வையிட்டு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் நிவாரண உதவித்தொகையை வழங்கினார்கள். அருகில் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிப கழகம் / திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் முனைவர் ச.விசாகன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.அ.பிரதீப், பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா உட்பட பலர் உள்ளனர்.

## திண்டுக்கல் சிட்டி மருத்துவமனை தீ விபத்து: அரசு மருத்துவக் கல்லூரி

# மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களுக்கு ரூ.37.50 லட்சம் நிவாரண நிதி!

## அமைச்சர்கள் இ.பெரியசாமி – அர. சக்கரபாணி – மா.சுப்பிரமணியன் வழங்கி – ஆறுதல்!

*சென்னை, டிச.15-*

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி. உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டு தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நபர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்து, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டு தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நபர்களை நேரில் பார்வையிட்டு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் நிவாரணம் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிப கழகம்/ திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் முனைவர் ச.விசாகன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.அ.பிரதீப், பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா ஆகியோர் உடனிருந்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனையில் நேற்று இரவு சுமார் 9.45 மணியளவில் சாட்சர்க்யூட் என்கின்ற வகையில் ஒரு மின் விபத்து ஏற்பட்டு சிட்டி மருத்துவமனையில் பாதிப்பு ஏற்பட்டது. தீ விபத்தினால் பெரிய அளவிற்கு நோயாளிகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. இருப்பினும் ஒருவருக்கும் மட்டும் தீ காயம் 10 சதவீதம் என்கின்ற அளவில் காலில் காயம் ஏற்பட்டுள்ளது. தீ விபத்து ஏற்பட்ட சமயத்தில் அதனால் ஏற்படுகின்ற புகை, அதே போல் அந்த மருத்துவமனையிலிருந்து அவசர வழியில் இறங்குவதற்கு தாங்களாகவே யாருடைய அறிவுறுத்தலுமின்றி 6 நபர்கள் லிப்டில் பயணம் செய்துள்ளார்கள். அந்த வகையில் லிப்டில் பயணித்த 6 நபர்கள் சம்பவ இடத்தில் மரணம் அடைந்துள்ளனர். அதில் 3 ஆணிகள், 2 பெண்கள், 1 குழந்தை என 6 நபர்கள் மரணமடைந்துள்ளனர்.

நூற்றுக்கும் மேல்பட்டவர்களுக்கு புகை சூழ்ந்த காரணத்தினால் பெரிய அளவிலான பாதிப்பு ஏற்பட்டு, அப்போது அங்கே இருந்த தீயணைப்புத்துறை மீட்பு வாகனங்கள், 108 ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள், வருவாய்த்துறை மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் ஏராளமான நபர்களை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் ஒருங்கிணைத்து இருக்கிறார்கள். அவர் இந்த சம்பவம் கேள்விபட்டவுடனே ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பழனி சட்டமன்ற உறுப்பினர், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் மற்றும் மாவட்ட சுகாதாரத்துறை அலுவலர்களும் விரைந்து வந்து போர்கால அடிப்படையில் பணியாற்றி, அம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளை தூக்கி வந்து திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்ட புறநோயாளிகளாக இருந்து சிகிச்சை பெற்று நேற்றே வீடு திரும்பி இருக்கிறார்கள். 3 நபர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மீதமுள்ள 41 நபர்களில் 6 நபர்கள் இறந்த நிலையில் போஸ்ட்மாடம் செய்யப்பட்டு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 4 நபர்களுக்கு பலத்த காயம் அடைந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார்கள். 31 நபர்கள் இலேசான காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று இரவு இந்த சம்பவம் குறித்து தெரிந்தவுடன், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களையும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களையும் தொடர்பு கொண்டு உடனடியாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள சொன்னதன் அடிப்படையில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அருகில் இருந்த காரணத்தினால் விரைந்து வந்து, விரைந்து பணியாற்றி, மேலும் உயிரிழப்பு இல்லாத நிலையில் தற்காத்து இருக்கிறார்கள். பலத்த காயம் அடைந்த 4 நபர்களில் 1 நபர் மட்டுமே இரண்டு நாட்களில் மீண்டு வருவார் அந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மீதமுள்ள 3 நபர்கள் நல்ல முறையில் உள்ளனர். மற்ற 31 நபர்கள் இலேசான காயங்களுடன் உள்ளவர்கள் மிகவும் தெளிவான நிலையில் உள்ளனர்.

இவர்கள் அனைவருக்குமே ஏற்கனவே அவர்களுக்கு தனியார் மருத்துவமனையில் அளிக்கப்பட்டு வந்த சிகிச்சையை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அவர்களுக்கு சிகிச்சை தொடர இருக்கிறார்கள். 35 நபர்களுக்கும் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க தயார் நிலையில் உள்ளனர்.

இந்நிலையில் முதலமைச்சர் அவர்கள் 6 இறந்த நபர்களுக்கு தலா ரூ.3 இலட்சம் என மொத்தம் ரூ.18 இலட்சமும், 4 பலத்த காயமடைந்து தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளோர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் என மொத்தம் ரூ.4 இலட்சமும், 31 இலேசான காயமடைந்து சிகிச்சையில் உள்ளோருக்கு தலா ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.15.50 இலட்சம் என ஆகமொத்தம் 41 நபர்களுக்கு ரூ.37.50 இலட்சம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது. காயம் அடைந்த 31 நபர்களின் குடும்பங்களுக்கும் எதிர்காலத்தில் எந்தமாதிரி சிகிச்சை தேவையோ விரைந்து செய்ய அமைச்சர் அவர்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் சே.ஹா. சேக்முகையதீன், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல், மாநகராட்சி ஆணையாளர் என்.ரவிச்சந்திரன், மருத்துவகல்லூரி முதல்வர் மரு.சுகந்திராஜ குமாரி, இணை இயக்குநர்(சுகாதார பணிகள்) மரு. பூமிநாதன், துணை இயக்கநர்கள் மரு.செல்வகுமார், மரு.அனிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மு.கோட்டைக்குமார், துணை ஆட்சியர்(பயிற்சி) செல்வி ராஜேஸ்வரிசுவி, வருவாய் வட்டாட்சியர்கள், நகராட்சி ஆணையர்கள் உட்பட துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

### 1.செரலாக்கினால் குழந்தைகளுக்கு சர்க்கரை நோய் அபாயமா?

**கனிமொழி கருணாநிதி!**



குழந்தைகளுக்கான உணவில் சர்க்கரை சேர்ப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மக்களவையில் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆறு மாதக் குழந்தைகளுக்கான உணவாக இந்தியாவில் விற்கப்படும் நெஸ்லே செரலாக் ஒரு ஸ்பூன் பவுடரில் 2.7 கிராம் சர்க்கரை இருப்பதாகவும் அதே உணவுப்பொருள் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனியில் சர்க்கரை சேர்க்கப்படாமல் விற்கப்படுகிறது எனவும் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்று சமீபத்தில் அறிக்கை வெளியிட்டிருக்கிறது என்பதை குறிப்பிட்டு பேசிய அவர், மிக இளவயதில் குழந்தைகளுக்கு உடல் பருமன் மற்றும் நாட்பட்ட நோய்களை உண்டாக்கும் அபாயம் இருப்பதால் இரண்டு வயதுக்குமுன் குழந்தைகள் உணவில் சர்க்கரை சேர்க்க வேண்டாம் என்று உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவுறுத்துகிறது.

அதன் அடிப்படையில் குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களில் சேர்க்கப்பட்ட சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துவதற்கு ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுமட்டுமல்லாமல் உலகளாவிய சுகாதாரப் பரிந்துரைகளுக்கு இணங்க குழந்தைகளுக்கான உணவுகள் தயாரிக்க தரநிலைகளை நிர்ணயம் செய்ய வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

### 2. நீதிபதி சேகர் குமார் யாதவை பதவிநீக்கம் செய்க!

**மாநிலங்களவையில் தீர்மானம் தாக்கல்!**

அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சேகர் குமார் யாதவை பதவிநீக்கம் செய்யக்கோரும் தீர்மானத்தை தி.மு.க. எம்.பி. பி.வில்சன் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் குழு கபில் சிபல் தலைமையில் மாநிலங்களவை செயலாளரிடம் சமர்ப்பித்துள்ளது. தீர்மானத்தை தாக்கல் செய்ய 50 எம்.பி.க்கள் தேவை உள்ள நிலையில் 55 மாநிலங்களவை எம்.பி.க்கள் இந்த தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று உத்தரப்பிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் விஸ்வ இந்து பரிக்சத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்ச்சியில் பங்கேற்று நீதிபதி சேகர் குமார் யாதவ் பேசியதற்கு எதிரிப்பு தெரிவித்து இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அவரது பேச்சு சிறுபான்மை சமூகங்களைக் நேரடியாக குறிவைப்பதாகவும் அவர்கள் மீது தப்பெண்ணத்தையும் வெறுப்புணர்ச்சியையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும், அவரது பதவிப்பிரமாண உறுதி மொழியையும் அரசியலமைப்புச் சட்டத்தின் மதச்சார்பின்மை பண்பையும் மீறிவிட்டதாகவும் தீர்மானம் குறிப்பிடுகிறது.

இதுபோன்ற பிளவுவாத, பாரபட்சமான கருத்துக்களைக் கூறியதன் மூலம் மக்களுக்கு நீதித்துறை மீதுள்ள நம்பிக்கையை நீதிபதி சேகர் சீர்குலைத்துள்ளார் எனத் தீர்மானத்தில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டப்பிரிவுகள் 124 (4), 124 (5), 218, ஆகியவை நீதிபதிகள் ஒருதலைப்பட்சமாகவும், நீதித்துறை மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையிலும் செயல்பட்டால் அவர்களைப் பதவிநீக்க வழிவகை செய்கின்றன.

நீதிபதி சேகர் குமார் யாதவ் மீது உச்சநீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள வழக்குகளின் அடிப்படையில் தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா அலகாபாத் உயர்நீதிமன்றத்திடம் அறிக்கை கேட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாகர்கோவில் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.நே.ராஜேஷ் ஏற்பாட்டில் பள்ளிவிளை அங்கன்வாடி மையத்திற்கு உபகரணங்கள் மற்றும் குழந்தைகளுக்கு புத்தகப் பை போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், பகுதி செயலாளர் இ.ஜவகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர். சதாசிவன், நாகர்கோவில் மாநகர துணை செயலாளர் பி.வேல்முருகன், மாமன்ற உறுப்பினர் எ.மேரி ஜெனட் விஜிலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.அகஸ்தீசன், துணை அமைப்பாளர் செ.சரவணன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சி.டி.சுரேஷ், துணை அமைப்பாளர்கள் ரா.முத்துக்குமார், என்.வி.விசாக் மோகன், த.மோகன்ராஜ், வட்டச் செயலாளர் அ.ஆத்தியப்பன் உட்பட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.